# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 104/ந/2019**

**நாள் : 17/02/2020**

**திரு M. கருணாகரன்,**
**தாராபுரம் – 638 657.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**தாராபுரம் நகராட்சி,**
**தாராபுரம் – 638 657.** – **எதிர் மனுதாரர்**

திருப்பூர் மாவட்டம், தாராபுரம், எல்லீஸ் நகர் அஞ்சல், அசோக் நகர், 180/32–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M. கருணாகரன் அவர்களின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 104/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை, விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருப்பூர் மாவட்டம், தாராபுரம், எல்லீஸ் நகர் அஞ்சல், அசோக் நகர், 180/32–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M. கருணாகரன் என்பவர் தாராபுரம் நகராட்சி செயல்பட்டுவந்த பழைய அலுவலக கட்டடத்தை வணிகப் பயன்பாட்டிற்காக குத்தகை விட்டதில் கண்டறியப்பட்ட கீழ்க்காணும் குற்ற முறையீடுகளைத் தெரிவித்து நகராட்சிக்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பை நகராட்சி ஆணையரிடமிருந்து வசூலிக்கவும், ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி ஆணையிடவும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

(1) வணிகப்பயன்பாட்டிற்கென குத்தகைக்கு விடப்பட்ட நகராட்சியின் பழைய அலுவலகக் கட்டடத்தின் கட்டட அமைப்பினை மாற்றியது ;

(2) ஆக்கிரமிப்பு செய்து கடைகள் அமைக்கப்பட்டது ;

(3) கட்டடத்தின் முன் முகப்பினை மாற்ற நகராட்சி அனுமதி வழங்கியது ;

(4) வாடகை மதிப்பீடு ரூ.65,000/–க்கு மேல் உள்ள நிலையில் ரூ.57,000/–க்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது ;

(5) குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டடத்தினை உணவகம், பெட்டிக்கடை மற்றும் விற்பனை மேளா நடத்துவதற்கு உள் வாடகைக்கு விடப்பட்டது ;

(6) சேவை வரி மற்றும் தொழில்வரி குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்கப்படாதது.

2. மனுதாரரின் குற்ற முறையீடுகள் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. நூறு ஆண்டுகளுக்கும் மேலான பழைமையான கட்டடத்தில் செயல்பட்டு வந்த நகராட்சி அலுவலகம், ரூ.5/– கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட நிலையில் நகராட்சியின் பழைய கட்டடத்தினை பொது ஏலம் மூலம் வாடகைக்கு விட்டு நகராட்சியின் நிதிநிலையை உயர்த்தும் நோக்கில் அக்கட்டடத்தினை குத்தகைக்கு விட 25.05.2018 நாளிட்ட தீர்மானம் எண்.553–இல் முடிவெடுக்கப்பட்டது. என்று ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட தீர்மானத்தின்படி அக்கட்டடத்தினை பொது ஏலத்தில் விட முடிவு செய்யப்பட்டு 27.06.2018, 12.07.2018,27.07.2018 10.08.2018 மற்றும் 21.08.2018 ஆகிய நாட்களில் ஏல ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு வெள்ளையங்கிரி என்பவர் 27.07.2018 அன்று மூன்றாவது முறையாக கோரப்பட்ட ஏல ஒப்பந்தத்தில் மற்றவர்களை விட மாத வாடகையாக ரூ. 57,000/–க்கு ஏலக்கேள்வி கோரினார் என்றும் 10.08.2018 மற்றும் 21.08.2018 ஆகிய நாட்களில் நடைபெற்ற ஏல ஒப்பந்தத்தில் யாரும் கலந்து கொள்ளாத நிலையில் உயர்ந்தபட்ச வாடகையாக ரூ. 57,000/–க்கு ஏல ஒப்பந்தம் கோரிய திரு வெள்ளையங்கிரி என்பவருக்கே பொது ஏல நிபந்தனைகளின் படி 3 ஆண்டுகளுக்கு வழங்க 23.08.2018 நாளிட்ட தீர்மானம் எண்.625–இல் மன்ற அனுமதி வழங்கியது என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். திரு வெள்ளையங்கிரி கோரிய குத்தகை ஒப்பந்தத் தொகையினை மன்றம் உறுதி செய்த நிலையில், 29.03.2018 நாளிட்ட நகராட்சி ஆணீணயரின் செயல்முறை எண்.2366/அ3/2018–இல் 01.04.2019 முதல் நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகைதாரர் வசம் நகராட்சி கட்டடம் ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், குத்தகைதாரரிடம் தொழில்வரி விதிப்புக்கு கேட்பு எழுப்பப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். கட்டடத்தின் கூரைப்பகுதி பழுதடைந்து மழைநீர் கசிந்ததால், மழைநீர் புகாவண்ணம் முதல் தளத்தில் ஷெட் அமைக்கப்பட்டது என்றும், அந்த ஷெட் அமைக்க நகராட்சியின் அனுமதி பெறாத நிலையில், குத்தகைதாரரால் கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அப்பகுதிக்கு விகிதாச்சார அடிப்படையில் வாடகை கணக்கீடு செய்யப்பட்டு 01.04.2019 முதல் வாடகையை உயர்த்திட மன்றத்தின் அனுமதி பெற்று கேட்பு எழுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், உயர்வு செய்யப்பட்ட வித்தியாச வாடகைத் தொகையான 12 மாத முன்பணம் ரூ. 3,37,380/– வசூலிக்கப்பட்டு நகராட்சி கணக்கில் வரவு வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 27.08.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தன்னால் இரண்டு மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவித்து நேரடி விசாரணையின் போது கையொப்பம் இடப்படாத ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்து அதனை தனது வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

4. தாராபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய அலுவலகக் கட்டடத்தின் மொத்த பரப்பு 9358 சதுரடி அக்கட்டடத்தினை பொது ஏலத்தில் அதிகத் தொகை ரூ.57,000/–க்கு மாத வாடகை கோரிய நபருக்கு ஏலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. குத்தகைதாருக்கு மேற்படி கட்டடம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பின்பு கட்டடத்தின் முதல் தளத்தில் நகராட்சி அனுமதியின்றி 4609

சதுரடி பரப்பில் ஷெட் ஒன்று அமைக்கப்பட்டதை கண்டறிந்த நகராட்சி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 4609 சதுரடி பரப்பளவிற்கும் மாதவாடகை ரூ. 28,115/– என நிர்ணயம் செய்து அத்தொகைக்கான 12 மாத வாடகை முன்பணமும் குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. எனவே, குத்தகைக்கு விடப்பட்ட நகராட்சியின் பழைய அலுவலகக் கட்டடத்திற்கு மாதவாடகையாக ரூ.85,115/– (ரூ.57,000 + 28115) வசூலிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. மேலும், மேற்குறிப்பிட்ட வாடகைத் தொகை மற்றும் சரக்கு சேவைக் கட்டணம் உட்பட மாதம் ஒன்றுக்கு ரூ.1,00,436/– குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்கப்படுவதாகவும் தெரிகிறது. மேற்குறிப்பிட்ட வாடகைத் தொகை விவரங்களை கணினியில் பதிவேற்றம் செய்யவும் நகராட்சி நிர்வாக ஆணையரிடம் கோரப்பட்டுள்ளது. குத்தகை ஒப்பந்தப்படி குத்தகை உரிமத்தினை வேறு எவருக்கும் உள் குத்தகைக்கு விடக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஏல நிபந்தனைகளின்படி குத்தகைதாரர் வேறு எவருக்கும் உள்வாடகைக்கும் கட்டடத்தினை விடக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், குத்தகைக்கு விடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட கட்டடத்தின் சில பகுதிகள் உணவகம், பெட்டிக்கடை மற்றும் பழக்கடை நடத்துவதற்கு உள்வாடகைக்கு விடப்பட்டுள்ளதாக முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால், உள்வாடகைக்கு எடுத்த நபர்களின் பெயர்கள் மற்றும் எப்பொழுது முதல் உள்வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்ற விவரங்க்ளை அளிக்க முறையீட்டு மனுதாரா தவறியுள்ளார். எனினும், முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டில் உண்மைத் தன்மை உள்ளதா என்பதை தல ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்வதுடன் உரிய நடவடிக்கையினையும் மேற்கொள்ளுமாறு திருப்பூர், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2020**–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், **17**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

20.2.20

20.2.2020

20/2/2020

பெறுநர்

1. **திரு எம். கருணாகரன்,**
**எண்.180/32,, அசோக்நகர்,**
**எல்லீஸ் நகர் அஞ்சல்,**
**தாராபுரம்,**
**திருப்பூர் மாவட்டம் – 638 657**

2. நகராட்சி ஆணையர்,
தாராபுரம் நகராட்சி,
தாராபுரம்,
திருப்பூர் மாவட்டம்

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி